# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1658/36 - 2010 ජුනි 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2010.06.17

*1658/36 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச.வ.பீ. 21/78.*

**1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்**

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை, கொழும்பு பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் (2009, மே 29 ஆந் திகதிய 1603/49 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) கட்டளைக்கான அட்டவணையை அத்தகைய கட்டளைக்கான அட்டவணையின் நிரல் II (துறைகள்) இல் காணப்படுவதாகிய அத்தகைய அட்டவணையின் நிரல் I (பீடம்) இல் காணப்படும் “கலைப்பீடம்” என்ற பதிவிற்கு நேரொத்தவாறான சகல பதிவுகளிற்கும் விடயங்களிற்கும் பதிலாக பின்வருவதனை இடுவதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்:-*

| “நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| கலைப்பீடம் | 1. பொருளியல் துறை |
| | 2. ஆங்கிலத் துறை |
| | 3. புவியியல் துறை |
| | 4. இனப்புள்ளியியல் துறை |
| | 5. வரலாற்றுத் துறை |
| | 6. சர்வதேச தொடர்புகள் துறை |
| | 7. அரசறிவியல் மற்றும் பொதுக் கொள்கைத் துறை |
| | 8. சிங்களத் துறை |
| | 9. சமூகவியல் துறை.”. |

திசாநாயக்க முதியான்செலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2010, யூன் 8.

7 - 137/1

*ச.வ.பீ. 21/78.*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான (2009, மே 28 ஆந் திகதிய 1603/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) கட்டளையாகிய இலங்கை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் கட்டளையை அதற்கான அட்டவணையில், அத்தகைய கருதப்பட்ட கட்டளைக்கான அட்டவணையில் "பீடம்" என்னும் தலைப்பின் கீழுள்ள நிரல் I இல் காணப்படும் "முகாமைத்துறை கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்" என்னும் விடயத்தை நேரொத்திருக்கும் அட்டவணையின் "துறைகள்" என்னும் தலைப்பின் கீழ் நிரல் II இல் காணப்படும் விடயம் II ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன்மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

"*12. தொழில் முயற்சித் துறை.*".

*திசாநாயக்க முதியான்செலாகே*
*சுமணவீர பண்டா திசாநாயக்க,*
*உயர்கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2010, யூன் 8.*

*7 - 137/2*

---

*ச.வ.பீ. 21/78.*

### *1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்*

*27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை*

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் பயனைக்கொண்டு சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட கட்டளை ஒன்றாகக் கருதப்பட்டதான கட்டளையாகிய இலங்கை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தைத் தாபிக்கும் (2009, யூன் 16 ஆந் திகதிய 1606/ 10 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான) கட்டளையை, அதன் I ஆம் நிரலிலும் அதன் II ஆம் நிரலின் நேரொத்த பதிவுகளிலும் காணப்படும் "மருத்துவ பீடம்" என்னும் பதிவை உடனடுத்து பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலம் மேலும் திருத்தப்படுகின்றது.*

| "*நிரல் I* | *நிரல் II* |
|---|---|
| *பீடம்* | *துறைகள்* |
| *முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வர்த்தக பீடம்* | *1. கணக்கியல் துறை*<br>*2. மனிதவள முகாமைத்துவத்துறை*<br>*3. சந்தைப்படுத்தல் துறை*<br>*4. நிதி முகாமைத்துவத் துறை.*". |

*திசாநாயக்க முதியான்செலாகே*
*சுமணவீர பண்டா திசாநாயக்க,*
*உயர்கல்வி அமைச்சர்.*

*கொழும்பு,*
*2010, யூன் 8.*

*7 - 137/3*

*ச.வ.பீ. 21/78.*

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையுடன் மேற்சொல்லப்பட்ட சட்டத்தின் 139 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் 21 ஆம் பிரிவின் கீழ் ஆக்கப்பட்டதும் அத்தகைய கட்டளைக்கான அட்டவணையில் நிரல் I இல் உள்ள (பீடம்) "கலை மற்றும் கலாசாரப்பீடம்" என்னும் பதிவை நேரொத்திருக்கும் நிரல் II இலுள்ள (துறைகள் ) பதிவுகள் தொடர்பில் 2007, நவெம்பர் 14 ஆந் திகதிய 1523/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான இலங்கை, கிழக்குப் பல்கலைக்கழகம் தொடர்பில் 1986, செத்தெம்பர் 26 ஆந் திகதிய 420/25 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான கட்டளையை நிரல் II இலுள்ள விடயம் 8 ஐ உடனடுத்துப் பின்வரும் புதிய விடயத்தைச் சேர்ப்பதன் மூலம் இக்கட்டளையால் திருத்துகின்றேன்.*

"9 வரலாற்றுத் துறை.".

திசாநாயக்க முதியான்செலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2010, யூன் 8.

7 - 137/4

---

*ச.வ.பீ. 21/78.*

## 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டம்

27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழான கட்டளை

*1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க, பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு உயர்கல்வி அமைச்சர் திசாநாயக்க முதியான்செலாகே சுமணவீர பண்டா திசாநாயக்க ஆகிய நான், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் விதப்புரையின்மீது, 2009, யூன் 23 ஆந் திகதிய 1607/13 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளையால் கடைசியாகத் திருத்தப்பட்டவாறான, 1995, நவெம்பர் 7 ஆந் திகதிய 896/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட இலங்கை ரஜரட்டை பல்கலைக்கழகம் தொடர்பில் சொல்லப்பட்ட சட்டத்தின் 21 ஆம் பிரிவின் கிழ் ஆக்கப்பட்ட கட்டளை பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றது.*

1. மேற்சொல்லப்பட்ட கட்டளையின் (iv) ஆம் பந்தியில் அதன் 3 ஆம் விடயத்துக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும் :-

"3. விவசாயப் பீடம் ;" ; அத்துடன்

2. மேற்சொல்லப்பட்ட கட்டளைக்கான அட்டவணையில் நிரல் I இலும் (பீடம்) நிரல் II இல் (துறைகள்) அதன் நேரொத்த பதிவுகளிலும் காணப்படும் "கமத்தொழில் பீடம்" என்னும் விடயத்திற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும் :-

| "நிரல் I | நிரல் II |
|---|---|
| பீடம் | துறைகள் |
| விவசாயப்பீடம் | 1. தாவர விஞ்ஞானங்கள் பிரிவு |
| | 2. விவசாய தொகுதிகள் பிரிவு |
| | 3. மண் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவப் பிரிவு.". |

திசாநாயக்க முதியான்செலாகே
சுமணவீர பண்டா திசாநாயக்க,
உயர்கல்வி அமைச்சர்.

கொழும்பு,
2010, யூன் 8.

7 - 137/5

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.